# இலங்கை வங்கி

உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 500 மிகப்பெரிய வங்கிகளில் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்ட அரச வர்த்தக வங்கியும் இலங்கையின் 1ம்தர வங்கியுமாகிய இலங்கை வங்கியில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையும் ஆற்றலும் ஊக்கமும் மாறுபட்ட சூழலில் செயலாற்றக் கூடிய தன்மையும், சிறந்த இலக்கினையும் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பயிலுநர் செயலாளர் உதவியாளர்

### தகுதிப் பிரமாணங்கள்

➢ இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

➢ தகைமைகள்

- க.பொ.த (சாதாரணதர) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆங்கிலமொழி உட்பட மூன்று (3) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் (6) சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

- க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் இரண்டு (2) பாடங்களில் (பொது ஆங்கிலம் மற்றும் பொது அறிவு தவிர்த்து) சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

- மூன்றாம் நிலை கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதியப்பட்ட அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றிடமிருந்து செயலாளர் உதவியாளர் சேவையில் (ஆங்கில மொழியில்) குறைந்தது 06 மாத டிப்புளோமா/சான்றிதழ் கற்கை நெறியை நிறைவு செய்திருத்தல்.

➢ ஏனைய தகைமைகள்

- ஆங்கிலம் மற்றும் சிங்கள/தமிழ் மொழிகளில் சிறந்த அறிவு (எழுத மற்றும் உரையாட)
- கணினி அறிவு அவசியம்.
- ஆங்கிலத்தில் கணினியில் தட்டச்சு வேகம் நிமிடத்துக்கு 40 சொற்கள்.

➢ வயது

விண்ணப்பமுடிவுத் திகதியில் 40 வயது அல்லது அதற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

### விதிகள் மற்றும் நிபந்தனைகள்

- பயிற்சிக்காலம் இரண்டு வருடங்களாகும். பயிற்சிக்காலத்தில் மாதாந்த கொடுப்பனவாக முதலாவது வருடம் 25,000/- ரூபாயும் இரண்டாவது வருடம் 28,000/-ரூபாயும் வழங்கப்படும்.
- இப்பதவி வங்கிச் சேவையின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய காணப்படினும் சாதாரண வங்கியியலுக்குப் புறம்பானதாகும் (மூடியசேவை).
- பயிற்சிக் காலத்தில் ஆற்றிய சேவையில் வங்கி திருப்தியடையும் பட்சத்தில் செயலாளர் உதவியாளர் தரம் I என்ற தரத்தில் நிரந்தர ஆளணியில் உறுதிப்படுத்தப்படுவர்
- வங்கியின் தேவைக்கேற்ப நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.
- வார இறுதி/விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

### தெரிவுசெய்யும் முறை

- கணினி தட்டச்சு வேகப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் தெரிவுசெய்யப்படுவர்

### விண்ணப்பிக்கும் முறை

2021 ஜுன் 05ம் (2021-06-05) திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எமது இணையத்தளமான www.boc.lk (Careers என்ற பகுதியின் கீழ்) ஊடாக உங்களது விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும். சமர்ப்பித்த விண்ணப்பத்தின் “விண்ணப்பத் தொடர்பு இலக்கத்தை” உங்களது எதிர்கால தொடர்புக்காக வைத்திருக்கவும்.

மேலே கூறப்பட்ட முறையிலல்லாது வேறு ஏதேனும் முறைகளில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

*மேற்குறிப்பிட்ட தகைமைகள் இல்லாத அல்லது பிழையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு விண்ணப்பமும் மேலதிக அறிவித்தலின்றி ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.*

***மனிதவளப் பிரிவு***
***இலங்கை வங்கி***
***தலைமை அலுவலகம்***
***கொழும்பு 01***

***தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.***

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்